Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 10    (25 . 12 . 1991)    புதன்கிழமை    ஓசை 310

## தொண்டர் ஆசிரியருக்கு பெப். நிரந்தர நியமனம்

பெப்ரவரி முதல் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வட-கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களை எதிர்வரும் பெப்ரவரி முதல் நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பதென கல்விச் சேவை ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக (3 ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குதொடுவாயில் புலிகள் அதிரடி

# 25 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

நத்தார் வாழ்த்துக்கள்

வாசக நேயர்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்

(மணலாறு)

கொக்குத் தொடுவாய் இராணுவமுகாமிற்கு அருகில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல் ஒன்றில் இருபத்தியைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம் மோதலில் புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து கல்லிறவு இராணுவ முகாமிற்கு சென்று கொண்டிருந்த இராணுவத்தினரை இடைமறித்து இத்திடீர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் இடம்பெற்ற இம் மோதல் 10 நிமிடங்கள் வரையில் நீடித்தது.

இம்மோதலில் 25க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஏனைய இராணுவத்தினர் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

## பெருமளவு நவீன ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கோயில்குளம் எனுமிடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற மோதலின்போது இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு

★ மினிமினி எல். எம். ஜி 01
★ ஏ.கே. எல். எம். ஜி. 02
★ ரி. 56-2 ரகத் துப்பாக்கிகள் - 08
★ ரி. 56-1 ரகத் துப்பாக்கிகள் - 07
★ ரி. 81 ரகத்துப்பாக்கிகள் 02
★ ரி 56 ரகத் துப்பாக்கிகள் 02
★ புதிய ரக ரி. 56 ரகத் துப்பாக்கிகள் - 02
★ இடைத்தாரவைகள் 3190
★ ஜே.ஆர். கைக்குண்டுகள் 19
★ ரி. 56 ரவைக்கூடுகள் -69
★ ரி. 81 ரவைக்கூடுகள் - 08
★ தொலைத் தொடர்புச் சாதனம் - 01

## இரு புலிகள் வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். ராதா (தமிழரசன்) (சிவஞானம் கண்ணன் - மட்டக்களப்பு) 2 ஆம் லெப். மிருசுதா (சுப்பிரமணியம் சசிவாதேவி - 6 ஆம் யூனிட் வட்டக்கச்சி, கிளிநொச்சி) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

இவ் இரண்டு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தமிழீழ விடுதலைப் போரில் எம்.ஜி. ஆரின் பங்கு காத்திரமானது

- அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அமரர் எம். ஜி. ஆரின் பங்கு காத்திரமானது என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறினார். இணுவில் சைவப்பிரகாச மகாஜன வித்தியாலய மண்டபத்தில் அனைத்திலங்கை எம். ஜி. ஆர் மன்றத்தின் அனுசரணையுடன் அமரர் எம். ஜி. ஆரின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மூத்த உறுப்பினர் தேவர் ஆகியோர் உரையாற்றினர். பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் பாலகுமாரன், மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவுப்பொறுப்பாளர் பரா, யாழ் மாவட்ட விசேடதளபதி செந்தாழன் உட்பட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## தீவிரவாதிகளை அகற்றுதல் ராவ் - ஜெயலலிதா பேச்சு

(சென்னை)

தமிழீழ தீவிரவாதிகளை தமிழகத்திலிருந்து வெளியேற்றுவது குறித்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பேச்சு நடத்தினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழக அரசுவிடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பாக தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொர்பசேவ் இராஜினாமா சோவியத்யூனியன் கலைப்பு

(மொஸ்கோ)

சோவியத்யூனியனின் கடைசி ஜனாதிபதியான கொர்பசேவ் இன்றுமாலை தனது பதவியை இராஜினாமாச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினுடன் ஆலோசனை கலந்தபின் இந்தப் பதவி விலகலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பொதுநலவாயத்தின் தலைவர்கள் முதல்கூட்டம் மொஸ்கோவில் நடைபெறும் தருணத்திலேயே கொர்பசேவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை சோவியத் நாடாளுமன்றமான சுப்ரீம் சோவியத் இரண்டு மணி நேரம் கூட்டமொன்றை நடாத்தி சோவியத்யூனியன் கலைப்புக்கான தீர்மான நகலை வரைந்துள்ளது.

## இரட்டை கொலை வழக்கு;

புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல் ஒன்றில் இருபத்தியைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். பெருந் தொகையான நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம் மோதலில் புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து கல்லிறவு இராணுவ முகாமிற்கு சென்று கொண்டிருந்த இராணுவத்தினரை இடைமறித்து இத்திடீர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து சுமார் 400 யார் தூரத்தில் இடம்பெற்ற இம் மோதல் 10 நிமிடங்கள் வரையில் நீடித்தது.

இம்மோதலில் 25க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு ஏனைய இராணுவத்தினர் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

# பெருமளவு நவீன ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கோவில்நுணை எனுமிடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற மோதலின்போது இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்களாவன:

- ★ மினிமினி எல். எம். ஜி 01
- ★ ஏ.கே. எல். எம். ஜி. 02
- ★ ரி. 56-2 ரகத் துப்பாக்கிகள் - 08
- ★ ரி. 56 -1 ரகத் துப்பாக்கிகள் - 07
- ★ ரி. 81 ரகத்துப்பாக்கிகள் 02
- ★ ரி 56 ரகத் துப்பாக்கிகள் 02
- ★ புதிய ரக ரி. 56 ரகத் துப்பாக்கிகள் - 02
- ★ இடைத்தாரவைகள் 3190
- ★ ஜெ ஆர். கைக்குண்டுகள் 19
- ★ ரி. 56 ரவைக்கூடுகள் -69
- ★ ரி. 81 ரவைக்கூடுகள் - 08
- ★ தொலைத் தொடர்புச் சாதனம் - 01

## இரு புலிகள் வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். ராஜா (தமிழரசன்) (ஞானம் கண்ணன் - [illegible]) 2 ஆம் லெப். [illegible] (சுப்பிரமணியம் சசிவாதேவி - 6 ஆம் யூனிட் [illegible], கிளிநொச்சி) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

இவ் இரண்டு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# மணலாற்றுப் பிரதேசத்தில் அகோர குண்டுவீச்சு

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்று நடைபெற்ற உக்கிரமோதலைத் தொடர்ந்து அப்பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதல் முடுக்கி விடப்பட்டுள்ளது.

மணலாறில் எதிர்பாராத பாரிய அளவிலான உயிரிழப்புக்களையும் ஆயுத இழப்புக்களையும் நேற்று சந்தித்த சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புப் பகுதிகளின் மீதும் காட்டுப் பகுதிகளின் மீதும் அகோர குண்டு வீச்சுத் தாக்குதலை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி குண்டு வீச்சுத் தாக்குதலில் சிறிலங்காவின் மூன்று குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்தி ஒன்றும் ஈடுபட்டுள்ளன.

இவற்றின் தாக்குதல்களினால் பல குடியிருப்புகள் பலத்தசேதமடைந்துள்ளதாகவும் காடுகள் தீப்பற்றி எரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதிகளில் விமானத்தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளதை சிறிலங்கா அரசும் ஊர்ஜிதம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் மோதல்; போராளி ஒருவர் வீரச்சாவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சமயபுரம் கோவிற்பண்ணைக்குச் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நேற்றுமுன்தினம் பிற்பகலில் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின்போது லெப். [illegible] (இராசதுரை சிறிவிஜயகுமார், [illegible], வவுனியா) என்னும் வீரவேங்கை வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்

## வீரச்சாவு

கப்டன் கிர்வாணி

லெப். கைலன்

ரகு

கடந்த இருபதாம் திகதி நடைபெற்ற [illegible] ஏற்பட்ட வெடிவிபத்தில் கப்டன் கிர்வாணி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் முஸ்லிம்கள் ராணுவத்தால் குடியேற்றம்

(மன்னார்)

மன்னாரில் எருக்கலம்பிட்டி சோனான் பண்ணை ஆகிய இடங்களில் இருக்கும் தமிழ் மக்களின் வீடுகளில் கடந்த

இருவாரத்தில் ஐம்பத்தேழு குடும்பங்களைச் சேர்ந்த இருநூற்றிமுப்பத்தைந்து முஸ்லிம்கள் இராணுவத்தினரால் குடி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# எம்.ஜி. ஆரின் பங்கு காத்திரமானது

\- அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் அமரர் எம். ஜி. ஆரின் பங்கு காத்திரமானது என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறினார். இணுவில் கலைப்பிரகாச மகாஜன வித்தியாலய மண்டபத்தில் அனைத்திலங்கை எம். ஜி. ஆர் மன்றத்தின் அனுசரணையுடன் அமரர் எம். ஜி. ஆரின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மூத்த உறுப்பினர் தேவர் ஆகியோர் உரையாற்றினர். பெரும் தொகையான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் பாலகுமாரன், மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவுப்பொறுப்பாளர் பரா, யாழ் மாவட்ட விசேடதளபதி செந்தாழன் உட்பட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## தீவிரவாதிகளை அகற்றுதல் ராவ் - ஜெயலலிதா பேச்சு

(சென்னை)

தமிழீழ தீவிரவாதிகளை தமிழகத்திலிருந்து வெளியேற்றுவது குறித்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பேச்சு நடத்தினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழக அரசுவிடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பாக தமிழக கடற்கரையோரப் பகுதிகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொர்பசேவ் இராஜினாமா சோவியத்யூனியன் கலைப்பு

(மொஸ்கோ)

சோவியத்யூனியனின் கடைசி ஜனாதிபதியான கொர்பசேவ் இன்றுமாலை தனது பதவியை இராஜினாமாச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினுடன் ஆலோசனை கலந்தபின் இந்தப் பதவி விலகலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

கொர்பசேவ் இன்று மாலை சோவியத் தொலைக்காட்சியில் தோன்றி தமது இராஜினாமாவை அறிவிப்பாரென அவரது உதவியாளர் ஒருவர் உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பொதுநலவாயத்தின் தலைவர்களின் [illegible] முதல்கூட்டம் மொஸ்கோவில் நடைபெறும் தருணத்திலேயே கொர்பசேவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை சோவியத் நாடாளுமன்றமான சுப்ரீம் சோவியத் இரண்டு மணி நேரம் கூட்டமொன்றை நடாத்தி சோவியத்யூனியன் கலைப்புக்கான தீர்மான நகலை வரைந்துள்ளது.

## இரட்டை கொலை வழக்கு; சுத.கட்சி உறுப்பினர் கைது

(கொழும்பு)

அத்தனகல நீதிமன்றத்தில் கடந்த நவம்பர் 25 ஆம் திகதியன்று இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தை யொட்டி இரத்தினபுரி மாநகர சபை உறுப்பினரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எச். விஜயபால என்பவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர் கடந்த இரு தினங்களாகப் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சூழல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஆயிரக்கணக்கில் தொண்டர்கள்

(யாழ்ப்பாணம்)

சூழல்பாதுகாப்பு சுகாதார வாரத்தின் இரண்டாம் நாளாகிய நேற்றைய தினம் யாழ். மாநகரசபைக்குட்பட்ட பல பகுதிகளில் சுகாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ஈடுபட்டனர்.

தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆகியவற்றின் தொண்டர்கள், மற்றும் நகர்ப்புறவாசிகள் ஆகியோர் விருந்த உற்சாகத்துடன் காலை முதல் நண்பகல்வரை மேற்படி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டனர்.

இவ்வேளைகளில் இழுவை இயந்திரங்கள், மாட்டுவண்டிகள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டது. மேற்படி கடமையில் ஈடுபட்ட தொண்டர்களுக்குரிய சிற்றுண்டி உணவு வகைகளை இவ் தொண்டர் நிறுவனங்கள் அன்பளிப்பாக வழங்கினர்.

வண்ணார்பண்ணை, நாவா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மண் மீட்புநிதி செலுத்த சங்கானையில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும் காரைநகர் வட்டவைப் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களிலிருந்தோரும் நாளை வியாழக்கிழமை 26 ஆம் திகதி மீட்பு நிதி செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் காலை 9-00மணி முதல் 12 - 00மணி வரையும்,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24-8 1940

உதிர்வு
27-12-1988

**முத்தையா இராஜசிங்கம்**
(ராசா - MR)

முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
(ஐக்கிய வியாபாரச்சங்க ஊழியர்)

வானத்து வெண்ணிலவே எம் வாழ்க்கையின்
பொன்னொளியே
வாழ்ந்தாயே வாழ்க்கை அது வையகம்
போற்றும் படி
எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்ட எமது அன்பு
ராசாவின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இ. ஜெயசீலன் இவரது பிரிவால் வாடும்
அரசடி நவாலி. (R/2028) குடும்பத்தினர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
05-01-1965

ஈழ மண்ணில்
(அகால மரணம்)
17-12-1989

**I. பாஸ்கரன் (இரஞ்சன்)**

தமிழீழ மண்ணுக்காய்த் தரணியிலே போராடி
தன்னையே அர்ப்பணித்தான் நம் ரஞ்சன் பாஸ்கரனே!
உன்னை நாம் மறப்போமோ உத்தமனே எங்குற்றாய்?
நின்னையே நினைத்து நிதம் நிலை குலைந்து
வாடுகின்றோம்.
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து உன் நினைவால்
என்றென்றும் வாடும்

பொற்பதி றோட்,
கொக்குவில். தாய், சகோதரர்,
(R/2034) உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

## அறிவித்தல்

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை குலசிங்கத்தின் அடையாள அட்டை (382591399V வீமன்காமம், தெல்லிப்பழை) (வெள்ளை நிறக் கவருக்குள்) கன்னாகம் மத்திய சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கன்னாகம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கவும். (R/2037)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது கடைசித் திகதி க. பொ. த (சா/த) - தேர்வு வரமுடியாதோர் தபால் வழியிலும் வரலாம். பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா; உயர்கலைக் கல்லூரி 73 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். (B/2024)

## வீதி அங்காடிகள்

(குருநகர்)

யாழ்நகர், குருநகர் பகுதிகளில் கிறிஸ்மஸ், புதுவருட தினங்களை முன்னிட்டு வீதி அங்காடிகளில் கடைகள் தோன்றியுள்ளன.

அரச இறுக்கமாக சையாரும் பொருளாதாரத் தடை, தீவகப் பகுதிகளில் இராணுவ முற்றுகையால் தொழிலை இழந்திருக்கும் கரையோரப் பகுதி மக்களின் வறுமை நிலைகளால் திருநாள் கால வியாபாரங்களில் பரபரப்பு குறைவாகவே காணப்படுகிறது.

எனினும் குறைந்த அளவில் கத்தோலிக்க மக்கள் திருநாளைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருவதும் அவதானிக்க முடிகிறது. (21)

## புலோலி மெதடிஸ்த மிஷன் மீண்டும் பழைய இடத்தில்

(பருத்தித்துறை)

சிறிலங்கா அரசின் குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல்களினால் சேதமடைந்த புற்றளை மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுச் செயற்பட்டு வந்த புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மீண்டும் பாடசாலையின் சொந்தக் கட்டடங்களுக்கு கடந்த 10 ம் திகதி முதல் மாற்றப்பட்டுள்ளது.

தற்போது இப்பாடசாலையின் கட்டடங்கள் தற்காலிக திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலையின் அருகாமையில் உள்ள வடமராட்சி வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரியிலும் இப்பாடசாலையின் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## 165ஆம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
21-01-1970

வீரச்சாவு
14-07-1991

**மாவீரன் லெப். சந்திரன்**
(சங்கரப்பிள்ளை அன்பரசன்)
மானிப்பாய்

சிந்திய செங்குருதியினால்
செம்மண் இது செழிக்கவேண்டும்,
சொரியும் குருதியினால்
புதியுகம் பிறக்க வேண்டும்,
சிந்தனைகள் உனதேயாக
செயற்படுவோம் எம்முடனே,

## வவுனியாவில் தொடர்ந்தும் இளைஞர்கள் கைது

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து பல தமிழ்ப் பொதுமக்களைக் கைதுசெய்து வருகிறது.

தாம் நிலைகொண்ட பகுதியிலிருந்து சில மைல் தூரம் முன்னேறிவந்து பற்றைக்காடுகளுக்குள் பதுங்கியிருந்து நடமாடும் இளைஞர்களை கைது செய்கிறது.

கடந்த 21 ஆம் திகதி பேயாடி கூழாங்குளம் பகுதியில் இவ்வாறு ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அந்தோனிப்பிள்ளை தனபாலசிங்கம் (27) என்பவரும், வேலுப்பிள்ளை வர்ணகுலசிங்கம் (34) என்பவரும் கைதானவர்களில் இருவராகும். இவர்கள் புதுக்குளம் வாசிகளாகும்.

இராணுவத்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையினால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பீதி நிலை ஏற்பட்டுள்ளது. (நி

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் இன்று (25-12-91) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு எனது அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகரசபை ஆணையாளர்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். (B/3686)

## யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை
பருத்தித்துறை.

### ஆண்டு 7 (1992) பிரவேசப் பரீட்சை

மேற்படி ஆண்டுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 31. 12. 1991
பிரவேசப் பரீட்சை : 03. 01. 1992

பரீட்சைக் கட்டணம் ரூபா: 50/- செலுத்தி விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

-அதிபர்

(R/2036)

நினைவு

அரசடி நவாலி. (R/2028) குடும்பத்தினர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
05-01-1965

ஈழ மண்ணில்
(அகால மரணம்)
17-12-1989

**I. பாஸ்கரன் (இரஞ்சன்)**

தமிழீழ மண்ணுக்காய்த் தரணியிலே போராடி
தன்னையே அர்ப்பணித்தாய் நம் ரஞ்சன் பாஸ்கரனே!
உன்னை நாம் மறப்போமோ உத்தமனே எங்குற்றாய்?
நின்னையே நினைந்து நிதம் நிலை குலைந்து
வாடுகின்றோம்.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து உன் நினைவால்
என்றென்றும் வாடும்

பொற்பதி றோட்,
கொக்குவில்.

தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

(R/2034)

---

## அறிவித்தல்

### வ.இ.ச. சபைப் பரீட்சைகள் - 1992

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களும், அறிவுறுத்தல்களும் 24 12 1991 செவ்வாய் தொடக்கம் வ.இ.ச. சபைப் பணிமனையில், காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை ரூபா பத்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 31 01. 1992 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இ. சுந்தரலிங்கம்
யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்
வ.இ.ச. சபைத் தலைவரும்

(B/3682)

---

...களின் தாக்குதல்களினால் சேதமடைந்த புற்றளை மகாவித்தியாலத்திற்கு மாற்றப்பட்டுச் செயற்பட்டு வந்த புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மீண்டும் பாடசாலையின் சொந்தக் கட்டடங்களுக்கு கடந்த 10 ம் திகதி

யின் கட்டடங்கள் தற்காலிக திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலையின் அருகாமையில் உள்ள வடமராட்சி வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரியிலும் இப்பாடசாலையின் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

---

## 165ஆம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
21-01-1970

வீரச்சாவு
14 07-1991

**மாவீரன் லெப். சந்திரன்**
**(சங்கரப்பிள்ளை அன்பரசன்)**
மானிப்பாய்

சிந்திய வேர்வையினால்
செம்மண் இது செழிக்கவேண்டும்,
சொரியும் குருதியினால்
புதியயுகம் பிறக்க வேண்டும்,
சிந்தனைகள் உனதேயாக
செயற்பட்டாய் எம்முடனே,
ஐந்து ஆண்டு காலம்
கணத்துள் மறந்து போமோ?
சொந்த மண்ணை வென்றெடுக்க
போர்முனைக்குச் சென்றவனே,
இந்த மண்வாழும் வரை
வாழுமடா உன் பெயர்!!
சொற்களாய் அன்றி செயலுருவில் - உன்
கனவுகள் ஈடேறும் ஆதலினால்
அமைதி கொள் அஞ்சலி செய்கின்றோம்!

- நண்பர்கள்

(B/3685)

---

ஸ்ரீதர் திரையரங்கில்
அல்ஜீரிய நாட்டு
# விடுதலைப் போராட்டம்
[தமிழாக்கம் செய்யப்பட்டது]
தினசரி 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3669)

---

## O+ + இரத்தம் உடனடி தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளி ஒருவருக்கு O + + வகையைச் சேர்ந்த இரத்தம் உடனடியாகத் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வகையைச்சேர்ந்த இரத்தம் உடையவர்கள் இரத்ததானம் செய்ய விரும்பின் யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

எனது அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகரசபை ஆணையாளர்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(B/3686)

---

யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை
பருத்தித்துறை.

## ஆண்டு 7 (1992) பிரவேசப் பரீட்சை

மேற்படி ஆண்டுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 31 . 12 . 1991
பிரவேசப் பரீட்சை: 03 . 01 . 1992

பரீட்சைக் கட்டணம் ரூபா : 50 /- செலுத்தி விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

—அதிபர்

(R/2036)

---

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 12 - 25**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு, கோட்டைக் கல்லாறுப் பகுதியில் தேசத்துரோகிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

சசி [பொன்னையா சிறீதரன் - குருமண்வெளி, மட்டக்களப்பு]

1990ஆம் ஆண்டு, மயிலவெட்டுவான், மட்டக்களப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஆற்றில் மூழ்கியதில் வீரமரணம் எமைப்பிரிந்த

கொனிற் / கென்றி [பூபாலசிங்கம் தர்மலிங்கம் - வந்தாறுமூலை மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப்புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3683)

## ❖ சிந்தனைக்கு ❖

சுத்தத்தைப் பேணி, சுகாதாரத்தைக் காப்பதும், சுயராஜ்யப் பணி.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 25-12-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

# சூழல், சுகாதாரம் வாழ்வின் ஒரு பகுதி

23ஆம் திகதியில் இருந்து 29ஆம் திகதிவரை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினால் பிரகடனப்படுத்தப்பட்ட சூழல், சுகாதாரவாரம், இன்றைய காலத்தின் தேவை கருதி பிரகடனப்படுத்தப்பட்டதொன்றெனக் கூறலாம்.

சிறிலங்கா அரசாங்கத்தினால், திட்டமிட்டு தமிழ்ப் பிரதேசங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத் தடையினாலும், இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும், தமிழ் மக்கள் பெரியளவில் பல்வேறு பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். திட்டமிட்ட பொருளாதாரத் தடையின் காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பெரும்பான்மை மக்களின் கொள்வனவு சக்தியை மீறிவிட்டது இதன் காரணமாக மக்கள் பெரும் பற்றாக்குறைகளையும், உணவு நெருக்கடியையும் எதிர்நோக்கியுள்ளனர். இதனால், போசாக்கின்மை, நோய் எதிர்ப்பு சக்தியின்மை காரணமாக மக்கள் உயிரிழப்புக்களைக் கூடச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது அண்மையில் தாய் சேய் இறப்பு வீதம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளமையே இதை விளக்கப் போதுமானதாகும்.

மறுபுறம் சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை பெரும் தொகை மக்களை நிர்க்கதியாக்கியுள்ளது. பெருமளவு வீடுகள் அழிக்கப்பட்டமையினாலும், பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளமையாலும், சிறிய பகுதிக்குள் மக்கள் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் செறிவாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது; இவை சுகாதாரத்திற்குப் பெரும் பங்கம் விளைவிப்பவையாகவும் சூழலைப் பாதிப்பவையாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக போதிய மலசலகூட வசதிகள் இன்மை, ஒரு சில கிணறுகளைப் பெருமளவு மக்கள் பயன்படுத்துவது போன்றவையும், அகதி முகாம்கள் போன்றவற்றில் இருந்து வீசப்படும் பெருமளவு கழிவுப் பொருள்களும் சூழலைப் பெரிதும் மாசடைய வைக்கின்றன.

மேலும், மாரிகாலமாகையால் பெரியளவில் அகற்றப்படாமல் கிடக்கும் கழிவுப் பொருள்களில் இருந்தும் குண்டு வீச்சால் அழிக்கப்பட்ட கட்டடங்கள், குழிகள் போன்றவற்றில் தேங்கியுள்ள மழை நீரில் உற்பத்தியாகும் நுளம்பு, பக்றீரியா முதலியவற்றால் நோய்கள் பரவுகின்றன அண்மைக் காலத்தில் யாழ் குடாநாட்டில் பரவலாகக் 'காய்ச்சல்' வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாநகரசபையிடமோ ஏனைய உள்ளூராட்சி நிலையங்களிடமோ, வைத்திய சாலைகளிலோ போதிய தொற்று நீக்கிகளோ தொற்றுநோய் தடுப்பு மருந்துக்களோ இல்லை. இதுதொடர்பான நடவடிக்கை எடுக்க ஏனைய வசதிகளும் இல்லை

இந்த நிலையில், போசாக்கின்மையால் நோய் எதிர்ப்புச்சக்தி குன்றி வரும் மக்களை நோயில் இருந்து பாதுகாக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ள சூழல், சுகாதாரத்தைப் பேணும் வாரம் பெரிதும் உதவிபுரியும் என்பதில் சந்தேகமில்லை திட்டமிட்டு உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் தடை செய்துள்ள சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பு நோக்கத்தை தடுக்க இது ஓரளவு உதவும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், சூழல்; சுகாதாரம் பேணுவது என்பது ஒரு வாரத்துடன் முடிவடையும் செயற்பாடல்ல இதுஒவ்வொருவரும் தமது வாழ்நாள் பூராகவும் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும்; இதன் மூலம் ஒருவர் தன்னையும் பாதுகாத்து தன் சமூகத்தையும் பாதுகாக்கின்றார். இந்நிலையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரகடனப்படுத்தியுள்ள சூழல், சுகாதாரம் பேணல் வாரம் ஒரு முன்னோடி நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும் இதற்காக மக்கள் இவ்வாரம் மட்டுமல்ல தம் வாழ்நாள் பூராகவும் பங்களிப்பைச் செய்தல் வேண்டும். அப்பொழுதே இது சமூகத்தின் ஆரோக்கிய வாழ்விற்கு வித்திடும்.

# காவிரிக்குத் தீர்வு காணும்போது தமிழக நலன் பாதுகாக்கப்படும்

## — நரசிம்மராவ் உறுதி

(சென்னை)

காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது தமிழகத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உறுதியளித்திருப்பதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தேசிய வளர்ச்சி சபைக் கூட்டத்தில் முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள புதுடில்லி சென்ற செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினமிரவு, சென்னைதிரும்பிய போது சென்னை விமான நிலையத்தில் இடம் பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

காவிரிநீர்ப் பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களை அழைத்து இது குறித்து பேசப் போவதாக பி. வி. நரசிம்மராவ் தன்னிடம் தெரிவித்ததாகவும் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

கர்நாடக மாநிலத்தில் வன்முறைக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மத்திய அரசு மூலமும் கர்நாடக அரசு மூலமும் இயன்றளவு இழப்பீடு அளிக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்திருப்பதாகவும், ஜெயலலிதா குறிப்பிட்டார்.

இதேநேரம் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமரைக் கேட்ட ஜெயலலிதா, தமிழக மக்களின் நிதானப் போக்கையும் தமிழகத்தில் உள்ள கர்நாடக மக்களைப் பாதுகாக்க மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் எடுத்துச் சொன்னார்.

இதேநேரம், அண்மையில் பெங்களூரில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட - ஈடு அளிக்கப்படும் என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளது. நஷ்டஈட்டுத் தொகை ஒருவார காலத்திற்குள் அளிக்கப்படும் எனவும் கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

# யூக்கின் இரு குடியரசுகளை ஜேர்மனி அங்கீகரித்தது

(போன்)

யுகோஸ்லாவியாவில் இருந்து பிரிந்து சென்றிருக்கும் குரோசியா, ஸ்லோவேனியக் குடியரசுகளுக்கு ஜேர்மனி முறைப்படியான அங்கீகாரம் வழங்கி விட்டது.

ஜனவரி மாதம் நடுப்பகுதியில் இந்த இரு குடியரசுகளுடனும் ஜேர்மனி ராஜரீக உறவுகளை மேற்கொள்ளும் எனதேற்று முன்தினம் போனில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அங்கீகாரம் வழங்குவதற்கு ஐரோப்பியசமூகம் நிர்ணயித்திருந்த ஜனநாயகம் சிறுபான்மையினரின் உரிமைகள் நிலைபான எல்லைகள் போன்ற தகைமைகளை இரு குடியரசுகளும் நிறைவேற்றி விட்டன என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

பால் சேகரிக்கும் நிலையம்

# செயற்பட்ட போதிலும் தமிழர் விற்கமுடியாத நிலை

வவுனியாவில் மீண்டும் பால் சேகரிக்கும் நிலையம் செயற்பட வைக்கப்பட்டபோதிலும் கிராமப்புறத் தமிழ் மக்கள் பால் விநியோகம் செய்ய முடியாத நிலை நீடித்து வருகிறது.

கடந்த வருடம் ஜூன் மாதம் இப்பால் சேகரிக்கும் நிலையம் செயற்படாமல் போனது தெரிந்ததே. அதன் பின்னர் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு கூட்டுறவுச் சங்கத்தினரால் சமீபத்தில் இந்நிலையம் செயற்பட வைக்கப்பட்டது.

இராணுவத்தின் சோதனை நடவடிக்கையினால் பால் பழுதடைய நேரிடலாம் என்ற அச்சத்தில் தமிழ்ப் பண்ணையாளர்கள் பழ. வவுனியா பிரதான வீதி ஊடாக பால் விநியோக நடவடிக்கையில் ஈடுபடவில்லை ஆயினும் சிங்கள மக்களும், நகரப்புற மக்களும் பால் விநியோகத்தில் ஈடுபடுகின்றனர்.

எல்லாப் பண்ணையாளர்களும் இந்த சேவையில் ஈடுபடுவதற்கு சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் முயற்சி மேற்கொள்ளாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (நி)

### தொண்டர்

கூட்டப்பட்ட விசேட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இத்தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து இதுவரை சுமார் 7000 மேன்முறையீடுகள்வந்திருப்பதாகக் கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் சகல மாகாண கோட்டக்கல்வி பணிப்பாளர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

இம்மேன்முறையீடுகள் தொடர்பாக கோட்ட, மாவட்ட, மாகாண, கல்விச் சேவை ஆணைக்குழு மட்டத்தில் விசாரணைக் குழுக்களை அமைக்க இருப்பதாக கல்விச் சுற்றறிக்கை 91/19 மூலம் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்

மேலும் குழுக்களில் நியமிக்கப்பட உள்ளவர்களின் விபரங்களையும் தருக்த அனுப்புமாறும் அவர் பணித்துள்ளார்.

### மண் மீட்பு

கட்டு. இந்துக் கல்லூரியில் பிற்பகல் 1-00மணி முதல் 2-30 மணி வரையும், சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3-00 மணி முதல் மாலை 4-00மணிவரை செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# விபுலானந்த அடிகளின் நூற்றாண்டுவிழா

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அடுத்த ஆண்டு பங்குனி மாதம் நடுப்பகுதியில் விபுலானந்த அடிகளின் நூற்றாண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

நாவலர் மகாவித்தியாலயத்தில் கடந்த பதினான்காம் திகதி நடைபெற்ற மேற்படி சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதன்துணைச் செயலர் செல்வக்கோன் தெரிவித்துள்ளார்,

இதேவேளை சங்கத்தின் பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டிதப் பரீட்சைகளை அடுத்த ஏப்பிரல் மாத தொடக்கத்தில் நடாத்துவதெனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 1000 கைதிகளுக்கு மன்னிப்பு

(கொழும்பு)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஆயிரம் சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது

இதனைவிட அபராதத் தொகை செலுத்தத் தவறியவர்களது தண்டனைக் காலம் குறைக்கப்படும். ஏனைய சிறைக்கைதிகளின் தண்டனைகளை ஒவ்வொரு ஆண்டிற்கும் மூன்று வாரங்கள் குறைக்கப்படும். மரணதண்டனை ஆயுள் கால தண்டனையாக மாற்றப்படும். பொதுமன்னிப்பு வழங்கும் திட்டத்தில் ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வீரச்சாவு

(துரைராஜ் சிவராஜ்குமார், விமலநகர், திருக்கோணமலை) வீரச்சாவெய்தினார்.

மேலும் இருவர் லெப்ரினன்ட் ஜெயகர் (சண்முகம் சக்திவினாயகம், மூதூர்) என்பவரும், வீரவேங்கை ரகு என்பவரும்வீரச்சாவெய்தினர்

கப்டன் கிர்வாணி திருமாயாத்திலேயே பயிற்சிக்காக யாழ்.நகர் வந்து மணலாறு பூநகரியில் 1986 ஆம் ஆண்டிற் பயிற்சி எடுத்தார். பின்பு சொந்தமண்ணான திருமலையில் பணியாற்றினார். மூதூரில் நடந்த 40கொமாண்டோ அதிரடிப்படையினருடனான மோதலிலும் இன்னும் பல தாக்குதல்களிலும் பங்குபற்றினார்.

## இளம்பரிதி வாணன் சீராளன்

சுன்னாகப்பகுதியில் தற்செயலாக நடந்த வெடி விபத்தில் விடுதலைப் புலிகளான இளம்பரிதி (ராஜ்) கைலாயநாதன் சிவகணேசன், சிவன்பண்ணை வீதி, கொக்குவில்), வாணன் (சண்முகலிங்கம் கோணகுமார், கரும்பளாய் கிழக்கு, சிராளன் (ரஞ்சன்) முருகேசன் வரதன், மாவைகளுடு, கைதடி) ஆகியோர் 24-12-91 அன்று வீரச்சாவு அடைந்தனர்.

## சந்துரு

கச்சாவெளியில் நடைபெற்ற எதிர்பாராத் தாக்குதலில் விடுதலைப்புலியான சந்துரு(செல்லையா சுகுமார், நச்சிமார் கோவிலடி.யாழ்ப்பாணம்)24 12 91 அன்று வீரச்சாவடைந்தார்

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### மன்னாரில்

யமர்ந்தப்பட்டுள்ளனர் இவர்களைக் குடியேற்றுவதற்காக சிறிலங்கா இராணுவத்தினர் திவாரணம் என்ற போர்வையில் கவர்ச்சிகரமான உதவிகளை வழங்கி வருவதாகத் தெரியவருகிறது.

### சூழல்

நிறை நல்லூர், கொக்குவில், குருநகர், பாசையூர், நச்சிமார்கோவிலடி, கொழும்புத்துறை, ஆர்ச்சவீதி ஆகிய பகுதிகளில் நேற்றைய தினம் சுகாதார நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றன.

இன்றைய தினம் ஏனைய நகரப்பகுதிகளில் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொண்டர்குழுக்கள் தயாராகி வருகின்றன. (க)

